## நம்மாழ்வார் அருளிச் செய்த
## திருவாய்மொழி
## எட்டாம் பத்து

### ஐந்தாம் திருவாய்மொழி - மாயக்கூத்தா
### எம்பெருமான் வடிவழகை நேரில் காணமாட்டாது ஆழ்வார் விடாய் விஞ்சி அழுது அரற்றுதல்

** மாயக் கூத்தா! வாமனா! *
வினையேன் கண்ணா! கண் கை கால் *
தூய செய்ய மலர்களா *
சோதிச் செவ்வாய் முகிழதா **
சாயல் சாமத் திருமேனி *
தண் பாசு அடையா * தாமரை நீள்
வாசத் தடம் போல் வருவானே! *
ஒரு நாள் காண வாராயே 1

காண வாராய் என்றென்று *
கண்ணும் வாயும் துவர்ந்து * அடியேன்
நாணி நன்னாட்டு அலமந்தால் *
இரங்கி ஒரு நாள் நீ அந்தோ! **
காண வாராய் கரு நாயிறு உதிக்கும் *
கரு மா மாணிக்கம் *
நாள் நல் மலை போல் சுடர்ச் சோதி *
முடி சேர் சென்னி அம்மானே! 2

முடி சேர் சென்னி அம்மா! * நின்
மொய் பூந்தாமத் தண்துழாய் *
கடி சேர் கண்ணிப் பெருமானே! *
என்றென்று ஏங்கி அழுதக்கால் **
படி சேர் மகரக் குழைகளும் *
பவள வாயும் நால் தோளும் *
துடி சேர் இடையும் அமைந்ததோர் *
தூ நீர் முகில் போல் தோன்றாயே 3

தூநீர் முகில் போல் தோன்றும் * நின்
சுடர் கொள் வடிவும் கனி வாயும் *
தேநீர்க் கமலக் கண்களும் *
வந்தென் சிந்தை நிறைந்தவா! **
மாநீர் வெள்ளி மலை தன் மேல் *
வண் கார் நீல முகில் போல *
தூநீர்க் கடலுள் துயில்வானே! *
எந்தாய்! சொல்ல மாட்டேனே 4

சொல்ல மாட்டேன் அடியேன் * உன்
துளங்கு சோதித் திருப் பாதம் *
எல்லை இல் சீர் இள ஞாயிறு *
இரண்டு போல் என் உள்ளவா! **
அல்லல் என்னும் இருள் சேர்தற்கு *
உபாயம் என்னே? ஆழி சூழ் *
மல்லை ஞாலம் முழு உதுண்ட *
மா நீர்க் கொண்டல் வண்ணனே! 5

கொண்டல் வண்ணா! குடக் கூத்தா! *
வினையேன் கண்ணா! கண்ணா * என்
அண்ட வாணா! என்று என்னை * ஆளக்
கூப்பிட்டு அழைத்தக்கால் **
விண் தன் மேல் தான் மண் மேல் தான் *
விரி நீர்க் கடல் தான் மற்றுத் தான் *
தொண்டனேன் உன் கழல் காண *
ஒரு நாள் வந்து தோன்றாயே 6

வந்து தோன்றாய் அன்றேல் * உன்
வையம் தாய மலர் அடிக் கீழ் *
முந்தி வந்து யான் நிற்ப *
முகப்பே கூவிப் பணி கொள்ளாய் **
செந்தண் கமலக் கண் கை கால் *
சிவந்த வாய் ஓர் கரு நாயிறு *
அந்தம் இல்லாக் கதிர் பரப்பி *
அலர்ந்தது ஒக்கும் அம்மானே! 7

ஒக்கும் அம்மான் உருவம் என்று *
உள்ளம் குழைந்து நாணாளும் *
தொக்க மேகப் பல் குழாங்கள் *
காணும் தோறும் தொலைவன் நான் **
தக்க ஐவர் தமக்காய் * அன்று
ஈர் ஐம்பதின்மர் தாள் சாய *
புக்க நல் தேர்த் தனிப் பாகா! *
வாராய் இதுவோ பொருத்தமே? 8

இதுவோ பொருத்தம்? மின் ஆழிப்
படையாய்! * ஏறும் இருஞ்சிறைப் புள் *
அதுவே கொடியா உயர்த்தானே! *
என்றென்று ஏங்கி அழுதக்கால் **
எதுவே ஆகக் கருதுங்கொல்? *
இம்மா ஞாலம் பொறை தீர்ப்பான் *
மது வார் சோலை * உத்தர
மதுரைப் பிறந்த மாயனே 9

பிறந்த மாயா! பாரதம்
பொருத மாயா! * நீ இன்னே *
சிறந்த கால் தீ நீர் வான் * மண்
பிறவும் ஆய பெருமானே! **
கறந்த பாலுள் நெய்யே போல் *
இவற்றுள் எங்கும் கண்டுகோள் *
இறந்து நின்ற பெரு மாயா! *
உன்னை எங்கே காண்கேனே? 10

** எங்கே காண்கேன்! ஈன் துழாய்
அம்மான் தன்னை * யான்? என்றென்று *
அங்கே தாழ்ந்த சொற்களால் *
அந்தண் குருகூர்ச் சடகோபன் *
செங்கேழ் சொன்ன ஆயிரத்துள் *
இவையும் பத்தும் வல்லார்கள் *
இங்கே காண இப்பிறப்பே
மகிழ்வர் * எல்லியும் காலையே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---